கோயம்புத்தூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

முன்னிலை : திரு.பெ.அய்யண்ணன் எம்.காம்.பி.எட்.எம்.பில்.,

ந.க.எண். 2587/ அ1/2019, நாள். 27.02.2019.

---

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக் கல்வித்துறை - இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு தொகுதி IV தேர்வு - 2015-16, 2016-17&2017-18 - தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு நியமன ஆணை வழங்குதல் - குறித்து.

பார்வை:

1. சென்னை-3, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழுதுணைச் செயலாளரின் கடிதம் எண். 1157/PSD-H1/2019, நாள். 18.02.2019.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 195/அ4/இ1/2019நாள். 23.02.2019.

---

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டு, பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட பணிநாடுநருக்கு பார்வை (2)-ல் காணும் செயல்முறைகளில் இக்கல்வி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளபடி அவரது பெயருக்கெதிரில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளி/அலுவலகத்தில் பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| தேர்வாணையம் பட்டியலின் வரிசை எண். | பணிநாடுநரின் பெயர் மற்றும் முகவரி | நியமனம் வழங்கப்படும் பள்ளி / அலுவலகம் |
|---|---|---|
| 103 | 060806027<br>SARAVANAN M,<br>39, ANNA NAGAR,<br>KANDASAMY PALAYAM (PO),<br>SIVAGIRI (VIA),<br>ERODE DISTRICT - 638 109. | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சூலூர் |

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள நபர் பணியில் சேரும் போது சிவில் சர்ஜன் தகுதிக்குக் குறையாத தகுதியுடைய மருத்துவ அலுவலரிடம் உடல் நலத்தகுதிச் சான்றினை உரிய படிவத்தில் பெற்று உடன் பணியில் சேருமாறு அறிவுறுத்தப்படுகிறது.

2. பணியில் சேர்ந்த நாள் முதல் ரூ.19500-62000(Level 8) ஊதியம் மற்றும் இதரப்படிகள் அனுமதிக்கப்படும்.

3. சம்மந்தப்பட்ட நபர் இப்பணிநியமன ஆணை கிடைக்கப்பெற்ற ஒருவார காலத்திற்குள் பணியில் சேரவேண்டும். பணியில் சேருவதற்குக் கால அவகாசம் கேட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது. நியமனம் செய்யப்பட்ட இடத்தில் உரிய காலத்தில் பணியில் சேராவிடில் நியமனம் பெற்றுள்ள நபரின் பெயரைத் தேர்வாணையத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4. நியமன ஆணை பெற்ற நபர் பணியில் சேர்ந்தவுடன் அவரது வேலை வாய்ப்புப் பதிவு அட்டையை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் சரண் செய்யும் பொருட்டு அனிக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

2. தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சியிலையும் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் கண்டிப்பாக தேர்ச்சி பெறவேண்டும்.

3. தகுதிகாண் பருவம் ஆணை பெறப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்பட வேண்டும்.

மேற்காணும் பணிவரன்முறை சார்பாக, உரிய பதிவுகள் அன்னாரின் பணிப்பதிவேட்டில் மேற்கொண்டு அதன் நகல் ஒன்றினை ஒட்டியும் வைக்க வேண்டும் என பள்ளித் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்,
கோயம்புத்தூர் – 641 001.

31.08.2021.

பெறுநர்:
திரு.மா.சரவணன்,
இளநிலை உதவியாளர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
சூலூர்
கோயம்புத்தூர் மாவட்டம்– 641402 (உரிய வழியாக)

நகல் : மாவட்டக்கல்வி அலுவலர், சர்க்கார்சாமக்குளம் (இ) ஒண்டிபுதூர்,
கோயம்புத்தூர் மாவட்டம்–641016

நகல் : தலைமை ஆசிரியர், அரசு (ஆண்கள்) மேல்நிலைப்பள்ளி, சூலூர்,
கோயம்புத்தூர் மாவட்டம்– 641402